**செய்தி வெளியீடு எண்: 958** **நாள்: 28.12.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (28.12.2018) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் அரியலூர் மாவட்டம், அரியலூரில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் 4 கோடியே 23 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் இதர கட்டடங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், கோயம்புத்தூர், கரூர், தருமபுரி, திருவண்ணாமலை, சென்னை, காஞ்சிபுரம், நாமக்கல், மதுரை, கடலூர், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 21 கோடியே 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தை அறிவுசார் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் சிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், கிராமப்புற மாணவ மாணவிகள் உயர்கல்வி கற்று, வாழ்வில் சிறப்பான நிலையை அடைந்திடும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கிராமப்புற மாணாக்கர்கள் உயர்கல்வி கற்பதற்காக நகரங்களை நாடி செல்ல சிரமப்படாமல், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே உயர்கல்வி கற்பதற்கு ஏதுவாக கடந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 56 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 19 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை துவக்கியுள்ளது. இதன்மூலம், மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு 48.6 சதவிகிதத்தைப் பெற்று இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக விளங்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசு, மாணவர்கள் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு ஏதுவாக, 2018–2019ஆம் கல்வியாண்டில் 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில், அரியலூர் மாவட்டம், அரியலூரில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் 4 கோடியே 23 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 வகுப்பறைகள், 1 ஆங்கில மொழி ஆய்வகம், 4 ஆய்வகத் தொகுப்பு மற்றும் கழிவறை கட்டடங்களை மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், கோயம்புத்தூர் – பாரதியார் பல்கலைக்கழகத்தில் 5 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள் மற்றும் மனித மரபியல், மூலக்கூறு மற்றும் உயிரி தொழில்நுட்பக் துறைகளுக்கான கட்டடங்கள்; கரூர் – அரசு கலைக் கல்லூரியில் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 பொன்விழா நினைவு வகுப்பறைக் கட்டடங்கள்; தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் உள்ள அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 வகுப்பறைக் கட்டடங்கள்; திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 1 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடம்;

சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள அரசு கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைக் கட்டடங்கள்; சென்னை, பாரதி மகளிர் கல்லூரியில் 87 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறைகள் மற்றும் பல்நோக்குக்கூடம்; சென்னை, காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைக் கட்டடங்கள், பல்நோக்குக்கூடம், மேம்படுத்தப்பட்ட ஆய்வகம் மற்றும் நூலகக் கட்டடங்கள்; காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் உள்ள இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரியில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 வகுப்பறைகள் மற்றும் கழிவறை கட்டடங்கள்;

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் உள்ள அரசு கல்வியியல் கல்லூரியில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கருத்தரங்குக்கூடம், நாமக்கல் – கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைக் கட்டடங்கள், இராசிபுரத்தில் உள்ள திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மையப்படுத்தப்பட்ட இயற்பியல் மற்றும் வேதியியல் துறைகளுக்கான ஆராய்ச்சி ஆய்வகக் கட்டடங்கள்;

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் உள்ள திரு.கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைக் கட்டடங்கள்;

திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் 1 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதி மற்றும் திருப்பூரில் உள்ள சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைக் கட்டடங்கள்; மதுரை மாவட்டம், தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வக பணிமனை கட்டடங்கள்; தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் 51 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவுக் கூடம்;

என மொத்தம் 25 கோடியே 24 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், அரசு தலைமைக் கொறடா திரு.எஸ். இராஜேந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., தொழில்நுட்ப கல்வி ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.கே. விவேகானந்தன், இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி இயக்குநர் திருமதி இரா.சாருமதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**